REGD. NO. M. 6911 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: பங்குனி 7உ புதன் (20—3—57) ★ வெளியூர்: பங்குனி 8உ வியாழன் (21—3—57) [இதழ் 241

தி. மு. க. பெற்றுள்ள வெற்றி

(20—3—57 நண்பகல்வரை)

★

சட்டசபை:	மக்கள் சபை:
15	4 (2 ஆதரவாளர்கள்)

(பெற்றுள்ள மொத்த வாக்குகள்)

சட்டசபை:	மக்கள் சபை:
15,46,459	11,05,132

'நம்மைத் தோற்கடிக்க நினைத்தவர்கள் தோற்றிருக்கிறார்கள்'

'வளர இருந்த எதேச்சாதிகாரத்தை தடுத்து நிறுத்தினோம்'

'வடநாடு தென்னாட்டை அழித்து வருவதை ஊரறியச் செய்தோம்'

தேர்தலில் கழகம் ஈட்டிய வெற்றிகள் குறித்து இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தனது 'மன்றம்' (15—3—57) இதழில், 'தேர்தலில் நாம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தினை கீழே தருகிறோம்:—

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடுவது என்பது, தமிழகத்தின் அரசியலில் நிச்சயமானதொரு திருப்பு மையமாக அமையும் என்பது நாம் எதிர்பார்த்ததைப் போலவே நிகழ்ந்திருக்கிறது.

தேர்தல் என்றால் ஏதோ ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிற ஒரு அரசியல் சடங்கு என்கிற நிலைமை மாறி, மிகுந்த அக்கரையோடும் பொறுப்புணர்ச்சியோடும் காரியமாற்ற வேண்டும் என்கிற விழிப்புணர்ச்சி இன்று நாட்டு மக்களிடையே மலர்ந்திருக்கிறது. இந்த எண்ண மலர்ச்சிக்கும் விழிப்புணர்ச்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகம், மாற்றாரும் மறுக்க முடியாத அளவுக்கு காரணமாக இருந்திருக்கிறது. இதனை, தமிழகத்துக்கு வெளியே இருக்கும் பொறுப்புள்ள பத்திரிகைகளும் கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன. மக்களிடையே கடந்த எட்டாண்டு காலமாக நாம் ஊட்டிவந்த பகுத்தறிவு உணர்ச்சியும், நாட்டுப் பற்றும் நல்ல பலன் தந்திருக்கிறது என்பதையும் நாம் கண்கூடாகக் காணமுடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டாலே தீப்பட்டதைப்போல் துடிக்கின்றவர்களைப் பார்க்கிற அதே நேரத்தில், தமிழகத்திற்கு மிகத் தேவையான கட்சியினர் நாம்தான் என்று பெருவாரியான மக்கள் நம்மை மகிழ்ச்சிப் பெருக்கோடு வரவேற்கும் காட்சி உழைப்போருக்கு உற்சாகம் தரத்தக்க விதத்தில் அமைந்திருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்த மட்டில் இத்தகைய விழிப்புணர்ச்சி, வெளிப்படையான பலனளிக்காமற் போனாலும், கூர்ந்து நோக்குவோரும், கூரிய மதி படைத்தோரும் ஒரு உண்மையை நிச்சயம் புரிந்துகொள்வார்கள். இதுவரை வெளிவந்துள்ள தேர்தல் முடிவுகளைப் பார்க்கிற நேரத்தில் வெளிப்படையாகக் காங்கிரஸ் வெற்றி பெற்று எண்ணிக்கையில் தொகை மிகுந்து இருப்பதாகக் காட்சியளித்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிடக் கூடியதாகவோ, புறக்கணிக்கக் கூடியதாகவோ இல்லை என்பதை நம்மைவிட மாற்றார்—குறிப்பாகக் காங்கிரஸ் கட்சியினர் நன்றாக உணர்ந்துகொண்டார்கள்.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தபடியாக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று நாம் சொல்லி வந்ததை, ஏதோ பெருமைக்குரிய விளம்பரமாக நாம் எடுத்தியம்பி வருவதாகவே பலரும் நினைத்தார்கள். ஆனால் இன்றுவரை வந்திருக்கிற தேர்தல் முடிவுகள் நாம் சொல்லிவந்த உண்மையை மேலும் பலப்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது. தமிழகத்தில் பல தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு அடுத்தபடியாக நமது கழக அபேட்சகர்கள் பெருவாரியான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ள பல இடங்களிலும் நம்முடைய தோழர்களைவிட சில ஆயிரம் வாக்குகள்தான் அதிகம் பெற முடிந்திருக்கிறது என்பதையும் யாரும் மறுக்கமுடியாது. வெற்றி பெற்றிருக்கிற நம்முடைய தோழர்கள் காங்கிரஸ்காரர்களை முறியடித்திருக்கிற இடங்களிலும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். தமிழகத்தின் தேர்தலிலேயே குறிப்பிடக்கூடியவிதத்தில் பெருவாரியாக வாக்குகள் பெற்று, வெற்றி பெறும் வாய்ப்பையும் நமது தோழர்கள் சிலர் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் பெருமையோடு கூறிக்கொள்ள முடியும்.

காங்கிரஸ், இன்று தமிழ் நாட்டில் பெற்றிருக்கிற வெற்றியை வைத்துக்கொண்டு, 'மக்களிடையே காங்கிரஸ் கட்சிக்குத்தான் செல்வாக்கு இருக்கிறது' என்று வாதாடுவது, உண்மையை நிச்சயம் புறக்கணிப்பதாகத்தான் இருக்கும். ஒரு சில இடங்களைத் தவிர, காங்கிரசுக்கு எதிர்ப்பு என்ற வகையில் ஒருமித்த எதிர்ப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பில்லாமல் போன காரணத்தினுல்தான், காங்கிரஸ் வெற்றி சுலபமாயிற்று என்பதை எவரும் மறுக்கமுடியாது. காங்கிரஸ் வெற்றியை வைத்து, 'மக்களிடத்தில் காங்கிரசுக்குப் பிடிப்பு இருக்கிறது,' என்று வாதிடுவதானுல், காங்கிரசுக்கு கிடைத்திருக்கிற வாக்குகளையும், காங்கிரசல்லாத மற்றக் கட்சிகளின் வாக்குகளையும் பார்க்கிற நேரத்தில், காங்கிரசல்லாத கட்சிகளின் வாக்குகள் பெருவாரியாக இருக்கின்றன. காங்கிரசை ஆதரித்துப் போடப்பட்ட வாக்குகளைவிட எதிர்த்துப் போடப்பட்ட வாக்குகள் அதிகம் என்பது தேர்தல் முடிவுகளிலிருந்து நாம் காணக்கிடைக்கும் ஒன்றாகும். தேர்தலில் பெறுகிற வெற்றிதான் செல்வாக்கை நிர்ணயிப்பது என்றால்—தேர்தல் நாணயமாக நடத்தப்படும் ஒன்றாக இருந்தால் நாமும் இதையே அளவுகோலாக ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இன்றையத் தேர்தலில் காங்கிரஸ் பெறுகிற வெற்றிக்கான காரணங்கள் அனைவரும் அறிந்தவை. காங்கிரஸ் கட்சி ஆட்களை தேர்ந்தெடுக்கிற நேரத்திலேயே பெருவாரியாகச்

(4-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் இராமசாமி படையாச்சி தலைதப்பிற்று!

தோழர் கிருஷ்ணமூர்த்தி நடத்திய ஜனநாயகப் போராட்டம்

சென்னை, மார்ச். 20—

நெல்லிக்குப்பத்தில் இராமசாமி படையாச்சி தப்பிவிட்டார்; 'கோழி'யைப் பறிகொடுத்து, மந்திரி பதவிக்காக உறுதிமொழிகளைக் காற்றிலே பறக்கவிட்டு காங்கிரசில் ஐக்கியமாகிவிட்ட அவரை எதிர்த்து தி. மு. கழக அபேட்சகர் தோழர் கிருஷ்ணமூர்த்தி பெரும் போராட்டம் நடத்தியும், வெற்றிபெற முடியாது போய்விட்டது.

மந்திரி இராமசாமிப் படையாச்சி பணபலமும், அதிகார பலமும் கொண்டு, எல்லா இடங்களையும் போலவே இங்கும் சகல இழிமுறைகளையும் கையாண்டு, மிகக் குறுகிய பெரும்பான்மையில் வெற்றி பெற்றிருக்கிறார்.

இவர் தனது வெற்றியை வெற்றியெனக் கொள்ளமுடியாத வகையில், கல்லூரி மாணவரான நமது அபேட்சகர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 40,417 வாக்குகள் பெற்றுள்ளார். அதுவே கழகத்திற்குக் கிடைத்துள்ள பெரும் வெற்றி எனக் கொள்ள வேண்டும்.

ஜனநாயகக் கடமையாற்ற, கொள்கை அடிப்படையில் பெரும் போராட்டம் நடத்தி கழகத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ள தோழர் கிருஷ்ணமூர்த்தியைவிட 2,483 வாக்குகள், மட்டுமே மந்திரி அதிகம் பெற்றிருக்கிறார்.

நெல்லிக்குப்பம் தனித் தொகுதியிலும்கூட நமது அபேட்சகரான ராஜாங்கம் அவர்கள் 29,492 வாக்குகள் பெற்றுள்ளார்; எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர் 4,807 வாக்குகள் மட்டுமே அதிகம் பெற்று வெற்றி தேடியுள்ளார்.

வாக்கு விவரங்கள்:

(பொதுத் தொகுதி)

கிருஷ்ணமூர்த்தி (தி. மு. க.)	40,417
இராமசாமி படையாச்சி (காங்.)	42,890

(தனித் தொகுதி)

ராஜாங்கம் (தி. மு. க.)	29,492
தங்கவேலு (காங்.)	34,299
பெருமாள் (சுயே.)	9,554
செல்லாதவை	8,052

கள்ளக்குறிச்சியில் தி.மு. கழகத்திற்கு இரட்டை வெற்றி!

இரு இடங்களிலும் காங்கிரஸ் மண்கவ்விற்று

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கள்ளக்குறிச்சியில் இரட்டை வெற்றி கிடைத்துள்ளது.

பொது, தனி இடங்களுக்குப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்கள் தோல்வியுற்றிருக்கின்றனர்.

கள்ளக்குறிச்சியில் கழகத்திற்குக் கிடைத்துள்ள இந்த இரண்டு வெற்றிகளையும் சேர்த்தால், சட்டசபையில் நமது எண்ணிக்கை 15 ஆக உயருகிறது.

கள்ளக்குறிச்சியில்தான் கடந்த ஆண்டு பிப்ரவரி 20-ல் ஹர்த்தால் நடைபெற்றபோது கழகத் தோழர்கள் சிலர் போலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினுல் படுகாயப்பட்டனர் என்பதும், அங்கு அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட காங்கிரஸ் சர்க்காருக்கு தேர்தலில் மக்கள் பாடம் புகட்டியிருக்கின்றனர் என்பதும் கருதத்தக்கதாகும்.

பொது இடத்திற்குக் கழக அபேட்சகராகப் போட்டியிட்ட சி. நடராசன் அவர்கள், காங்கிரஸ் அபேட்சகரைவிட குறுகிய பெரும்பான்மையே பெற்றிருந்தாலும் மொத்தம் 25,020 வாக்குகள் பெற்று வெற்றியடைந்துள்ளார்.

தனித் தொகுதிக்குப் போட்டியிட்ட எம். ஆனந்தன் அவர்கள், 24,099 வாக்குகள் பெற்று மகத்தான வெற்றி ஈட்டியுள்ளார்!

வாக்கு விவரங்கள்:

(பொதுத் தொகுதி)

சி. நடராசன், (தி. மு. க.)	25,020
கே.பார்த்தசாரதி (காங்.)	24,939
அலமேலு (சுயே.)	5,238

(தனித் தொகுதி)

எம். ஆனந்தன் (தி.மு.க.)	24,099
எல். ஆனந்தன் (காங்.)	22,665
நாராயணசாமி (சுயே.)	8,331
தாண்டவராயன் (சுயே.)	4,290
செல்லாதவை	6,035

பொது இடத்திலும், தனியிடத்திலும் போட்டியிட்ட மூன்று சுயேச்சைகளும் ஜாமீன் இழந்தனர்.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—3—57 புதன்

வெற்றியின் இலட்சணம்!

தேர்தல் வந்தது, போயிற்று. தேர்தலின் விளைவு தெளிவாகி விட்டது.

காங்கிரசுக் கட்சியினர் மீண்டும் ஒருமுறை அரசு கட்டில் ஏறும் வாய்ப்பினைப் பெற்று விட்டனர்.

அடுத்த ஐந்தாண்டுக் காலம் வரை நமது மாநிலத்தில் காங்கிரசு ஆட்சிதான் நடைபெற இருக்கிறது என்பது நிச்சயமாகிவிட்டது.

இம்முறையும் ஆட்சிப் பொறுப்பில் காங்கிரசுக் கட்சிதான் இருக்கமுடியும் என்ற உண்மையை, தேர்தலுக்கு முன்பிருந்தே நாம் திட்டவட்டமாகத் தெரிந்திருந்தோம்.

தெளிவாகத் தெரிந்திருந்த அவ்வுண்மையை நாம் உள்ளத்தில் ஒளித்து வைத்திருக்கவும் இல்லை.

தேர்தலுக்கு முன்பிருந்தே, வாய்ப்பு நேர்ந்தபொழுதெல்லாம் அவ்வுண்மையை அழுத்தந் திருத்தமாக எழுதியும் வந்தோம்.

தேர்தலில் கலந்துகொள்வது என்ற திருச்சி மாநாட்டு முடிவை, அக்கருத்துடன் பிணைத்துச் செப்பனிட்டு, ஆளப்போகும் காங்கிரசுக் கட்சிக்கு எதிராகச் சிறந்ததோர் எதிர்க்கட்சியாக அமைய முயலுவது என்ற முயற்சியை மேற்கொள்ளத் துணிந்தோம்.

அதற்கு ஆக்கந்தேடும் அளவிலேயே, நமது கழகத்தின் தேர்தல் முறையீடும் ஆக்கப்பட்டது.

சில பலரைப்போல், தேர்தலில் காங்கிரசுக் கட்சியைக் கணிசமாக முறியடித்து, எதிர்க்கட்சி அல்லது மாற்றுக் கட்சிகளின் ஆட்சியை அமைத்துவிட முடியும் என நாம் கற்பனை செய்து கொண்டதும் இல்லை; அக்கற்பனையை மக்கள் அறியப் பறைசாற்றியதுமில்லை.

நாம் எதிர்பார்த்தபடியே காங்கிரசுக் கட்சி தேர்தலில் வெற்றிபெற்று இருக்கிறது என்றாலும், அந்த வெற்றியை காங்கிரசுக் கட்சி எப்படி பெற்று இருக்கிறது—எப்படிப் பெற முடிந்தது என்பது ஆராய்ந்து அறியத்தக்கது.

காங்கிரசு பெற்றுள்ள கணிசமான வெற்றிக்கும், பெருந்தொகையினரான மக்களின் விருப்பு வெறுப்புக்கும் எத்தகைய தொடர்பு இருந்திருக்கிறது என்பதும் சிந்திக்கத் தக்கது.

அதுவுமன்றி, காங்கிரசுக் கட்சி இத்தேர்தலில் பெற்றுள்ள வெற்றிக்கும் சனநாயகப் பண்பாட்டிற்கும் உள்ள உறவு முறை நுணுகி ஆராயத் தக்கது.

நேர்மை, நியாயம், நாணயம், சட்டம் ஆகிய புனிதமான கோட்பாட்டிற்கு, தேர்தலில் கலந்துகொண்ட காங்கிரசுக் கட்சியினர் காட்டிய மதிப்பு எத்தகைய நிலையில் இருந்தது என்பதும் ஆராய்ந்து உணரப் படவேண்டும்.

காந்திய பாரம்பரியத்திற்கும் தேர்தலில் கலந்துகொண்ட காங்கிரசுக் கட்சியினருக்கும் இருந்த தொடர்பும் ஆராய்ந்து அறியத்தக்கது.

இவ்வளவையும் துருவித் துருவி ஆராய்ந்தால், ஒரே ஒரு முடிவிற்குத்தான் நல்லறிவாளர்கள் வந்தாகவேண்டும்.

காங்கிரசுக் கட்சியினர் தேர்தலில் பெற்ற வெற்றியின் இலட்சணத்தை நல்லறிவாளர்கள் ஆராய்ந்துதான் தெரிந்து கொள்ளவேண்டும். அவ்வாறு ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டிய தொல்லையும் காங்கிரசுக் கட்சியினருக்குக் கிடையாது.

ஆராய்ந்து பார்க்கவேண்டிய அவசியமில்லாமலே, தங்கள் வெற்றியின் அவலட்சண உள்ளடக்கத்தைக் காங்கிரசுக் கட்சியினர் தெரிந்துகொண்டு இருக்கிறார்கள்.

தேர்தல் விதிகளை மீறி இருக்கின்றனர்;

நேர்மையற்ற நடைமுறைகளை மேற்கொண்டு இருக்கின்றனர்;

நியாய வழிகளை ஒழித்திருக்கின்றனர்;

ஒழுக்கத்தை உதறித் தள்ளி இருக்கின்றனர்;

சனநாயகப் பண்பைக் கொலை செய்திருக்கின்றனர்—

இவ்வளவு அதிக்கிரமச் செயல்களுக்குப் பிறகு, காங்கிரசுக் கட்சியினர் வெற்றி பெற்றுள்ளனர்!

பணம் - காங்கிரசுக் கட்சியினருக்கு வெற்றியைத் தேடித் தந்திருக்கிறது!

அதிகாரத்தைக் காட்டி அச்சுறுத்தி, அரசு கட்டிலில் அமரும் வாய்ப்பினை காங்கிரசுக் கட்சியினர் பெற்று இருக்கின்றனர்!

வெற்றி பெற்றவர்களுக்கு இருந்து தீரவேண்டிய முகப் பொலிவு, காங்கிரசுக் கட்சியினர் முகங்களில் படிந்திருக்கவில்லை!

அவர்கள் விழி ஒளிமங்கிக் கிடக்கிறது!

முகங்களில் சோகம் சொட்டுகிறது!

அவர்கள் உள்ளங்களில் உறைந்து கிடக்கும் இரத்தம்—மிகக் கொடுங்குற்றம் மக்களைக் கண்டதும் அவர்களை நாணச் செய்கிறது—கூனிக் குறுகி நடக்கச் செய்கிறது!

அவர்கள் நா தடுமாறுகிறது!

கால்கள் நடக்க முடியாமல் பின்னிக்கொள்ளுகின்றன!

வெற்றி பெற்றவர்களுக்கு இருந்தாக வேண்டிய துணிவும தெளிவும் அவர்கள் சொல்லிலும் இல்லை—தோற்றத்திலும் இல்லை!

வெற்றிபெற்ற இவர்களைக் கண்டதும் 'இவர்களா வெற்றி பெற்றனர்—இவர்களா எங்கள் பிரதிநிதிகள் — முக்காலும் இல்லை—பணம் வென்றது—இவர்கள் பணத்தின் பிரதிநிதிகள்' எனப் பொதுமக்களின் நெஞ்சு, விழிவழி கேலியாகப் பேசுவதைக் காங்கிரசுக் கட்சியினர் காணுகின்றனர்.

இதன் பலனாகக் காங்கிரசுக் கட்சியினர், வெற்றி தந்த மகிழ்ச்சியில் புரளுவதற்குப் பதிலாக, சொல்லொணா வேதனையில் உழலுகின்றனர்.

இத்துடன், பாடுபட்டுத் தேடிய பணம் இலட்சக்கணக்கில் கைமாறிப் போய்விட்டதால் ஏற்பட்ட கலக்கமும் காங்கிரசுக் கட்சியினர் கண்களில் நீராகப் பெருக்கெடுத்தோடுகிறது!

இந்த இலட்சணத்தில்தான் காங்கிரசுக் கட்சியின் வெற்றியும் பதவி வேட்டையும் அமைந்து இருக்கிறது.

எனவே, இப்படி எள்ளிநகையாடும் கண்களுடன் நோக்கும் பொதுமக்களை, காங்கிரசுக் கட்சியினரால் எவ்வாறு சந்திக்க முடியும்?

நான்காவது இரும்பு உருக்குத் தொழிற்சாலை

உத்தேசம் திட்டக் கட்டத்தை அடைகிறது

இதுவும் வடநாட்டில்தானு?

புதுடில்லி, மார்ச் 19—

நான்காவதாக ஒரு பெரும் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை நிறுவ டில்லி உத்தேசித்திருப்பதாக ஏற்கனவே ஒரு செய்தி வெளிவந்தது.

இப்போது அந்த உத்தேசம், திட்டமாக உருப் பெறும் கட்டம் வந்து விட்டதாம்!

ரூர்கேலா தொழிற்சாலைக்கு ஜெர்மனி நாட்டு டாமாக் கம்பெனியாருடன் கூட்டாகச் சேர்ந்து சாதனங்களைத் தந்து வரும் கிரப்ஸ் கம்பெனியின் முதல்வர் இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டிருக்கிறாராம்.

அவர், இந்தியாவில் மற்றுமோர் இரும்பு—உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிப்பது பற்றி ஆராய்ச்சி நடத்துவாராம்.

இந்தத் தொழிற்சாலை, இப்போது அமைந்திருக்கிற எல்லா உருக்குத் தொழிற்சாலைகளையும் விட சகல துறைகளிலும் விரிவானதாகவும் பெரியதாகவும் இருக்குமாம்.

இதுவும், 'இந்தியா என்றால் வடநாடுதான்' என்று கருதிக் கொண்டிருக்கும் டில்லிப் பெரியவர்களால் வடநாட்டிலேயேதான் நிறுவப்படும் என்றும் கூறப்படுவது, எத்தனை தூரம் உண்மை என்பது போகப்போகத்தான் தெரியும்!

மற்றுமோர் உரத் தொழிற்சாலை

பல கோடி ரூபாய் செலவில் பம்பாயிலாம்!

புதுடில்லி, மார்ச் 19—

எங்குநிறுவுவது என்றதிடமான முடிவின்றி, உத்தேசிக்கப்பட்டிருந்த மற்றுமொரு உரத்தொழிற்சாலை, பம்பாயிலேயே நிறுவப்படும் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

பம்பாயில் அந்த உரத் தொழிற்சாலையை நிறுவலாம் என முடிவு செய்துவிட்டபோதிலும், அத்தொழிற்சாலை நிறுவுவதற்காகும் செலவு பற்றிக்கணக்கிட்ட பிறகே உற்பத்தி இலாகா அதுபற்றி ஒரு முடிவு எடுக்குமாம்!

இன்னும் அதிகமான உரம் நாட்டிலேயே உற்பத்தியானல் வெளிநாட்டு இறக்குமதி குறையும்; அப்போது வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படும் என்றும் இதற்காகவாவது புதிய தொழில்கள் துவக்கவேண்டியுள்ளது என்றும் டில்லி கூறுகிறதாம்!

துர்க்காபூர் தொழிற்சாலை

வேகமாக வளரும் விதம்

துர்க்காபூரில், இங்கிலாந்து நிறுவனம் ஒன்றின் உதவியுடன் சர்க்கார், மற்றும் பிர்லா கம்பெனியார் கூட்டாகத் துவங்கும் இரும்பு—உருக்குத் தொழிற்சாலை நிர்மாணம் வேகமாக நடைபெறுகிறதாம்!

ஏற்கனவே இங்கிலாந்திலிருந்து சாதனங்கள் பல கப்பலேறிவிட்டனவாம்!

தொழிற்சாலைக்குத் தேவைப்படும் 5,500 ஏகரா நிலத்தில், இப்போது 3,700 ஏகர் நிலம் பெறப் பட்டுவிட்டதாம்; எஞ்சியவையும் சீக்கிரமே ஆர்ஜிதம் செய்யப்படுமாம்!

தொழிற்சாலையை ஒட்டி உருவாகும் நகர்ப்புறத்திற்கு சுமார 9,000 ஏகர் நிலம் தேவைப்படும் என்றும், இதற்காக ஏற்கனவே 2,600 ஏகர் நிலம் ஆர்ஜிதமாகிவிட்டது என்றும் கூறப்படுகிறது.

தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு நிறுவனம், இந்த துர்காபூர் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலை அருகே ஒரு தெர்மல் நிலையத்தை நிறுவும் என்றும் கூறப்படுகிறது.

வேகமாக வளரும் இந்தத் தொழிற்சாலைக்கு ரூ. 120 கோடி வரை செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே!

பத்தினிகளாகிவிட கருதுகிறார்களாம்

'கொல்லைப்புறமாக' தோற்றவர்களை மந்திரிகளாக்கமாட்டார்களாம்!

தேர்தலில் தோற்றுப்போன மந்திரிகளையும், சட்டசபை உறுப்பினர்களையும் 'கொல்லைப்புற வழி'யாக மந்திரி சபைக்குள்ளேயோ, அல்லது மேல் சட்டசபை, மாநிலங்கள் சபை இவற்றுக்குள்ளேயோ அனுமதிக்கக்கூடாது என்று காங்கிரஸ் பார்லிமெண்டரி 'போர்டு' கருத்தறிவித்துள்ளதாம்.

மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பது பற்றியும், கட்சியில் தோற்றவர்களை மேல்சபைகளுக்கு உறுப்பினர்களாக்குவது பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும், அப்போதுதான் மேலே கண்ட கருத்து 'தேசிய ஜனநாயக சம்பிரதாயம் மதிக்கப்பட வேண்டும்' என்ற நோக்குடன் வெளிப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

மக்கள் தந்த தீர்ப்பு மதிக்கப்படுமா?

ஆமதாபாத், மார்ச் 19—

"மத்திய அரசாங்கத்தின் தொழில் அமைச்சர் கந்துபாய் தேசாய் தேர்தலில் அடைந்த தோல்வியே, பம்பாய் இருமொழி மாநிலமாக அமைந்திருப்பதை மக்கள் விரும்பவில்லை என்பதையும், தனி குசராத்தி மாநிலம் அமைய வேண்டுமென்று மக்கள் உறுதியாகக் கோருகின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது" என்று மகா குசராத் சங்கத் தலைவர் இந்துலால் யக்னிக், நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

"எனக்கும், மற்ற அபேட்சகர்களுக்கும் மக்கள் வெற்றியை தேடித் தந்திருப்பது, இருமொழி மாநிலமாக அமைந்துள்ள பம்பாய் பற்றி மீண்டும் மேலிடங்கள் சிந்தித்து முடிவு செய்ய வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கியிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில்

குழந்தைகள் உணவு தயாரிக்க திட்டம்

ரூ. 10,000 செலவாகும்

பம்பாய் கைரா மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பரிசோதனை முறையில் குழந்தைகள் உணவு தயாரிக்க தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கார்ப்பரேஷன் ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்கிறது; அத்திட்டத்துக்கு ரூ. 10,000 செலவாகும்.

பாலில் மிதமிஞ்சியிருக்கும் கொழுப்பை அகற்றிவிட்டு, புளித்துக் கட்டியாவதற்குள்ள தன்மையை மாற்றுவதற்கு மாற்றுப் பொருள்கள் சேர்த்து அந்த உணவு தயாரிக்கப்படும். எருமைப் பாலிலிருந்து அது தயாரிக்கப்படும்; பசும்பாலைப் போலவே இக்காரியத்துக்கு எருமைப் பாலையும் பயன்படுத்தலாம். பொது மக்கள் இந்த உணவை எப்படி வரவேற்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்குப் பரிசீலனை நடந்துவருகிறது.

பர்மாவில் சாகுபடி நிலங்கள் தேசீய மயமாகின்றன

தென்னுட்டுச் செட்டியார்களுக்கு மட்டும் ரூ. 42 - இலட்சம் நஷ்டஈடு தரப்படும்

இரங்கூன், மார்ச் 19—

பர்மாவில் தேசியமயமாக்கப்பட்ட விவசாய நிலங்களுக்காக சர்க்கார் இந்த ஆண்டு ரூ. 82 இலட்சம்வரை நஷ்ட ஈடு தரவிருக்கிறதாம்!

மொத்தம் எவ்வளவு?

பர்மாவில் தேசியமயமாக வேண்டிய நிலங்கள் 62,26,150 ஏகர் என்றும், இவற்றில் 23,43,755 ஏகர்கள் தென்னுட்டு செட்டியார்களுக்குச் சொந்தமானவை என்றும், மொத்த நிலத்தையும் தேசியமயமாக்கினுல்.. ரூ. 13,70,00,000 வரை நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருக்கும் என்றும், அப்படியானுல் செட்டியார்களுக்கு ரூ. 4,60,00,000 நஷ்டஈடு கிடைக்கும் என்றும், ஆனுல் இதுவரையில் தேசியமயமாக்கும் சட்டப்படி 13,93,273 ஏகர் நிலத்தை மட்டுமே தேசியமயமாக்கியுள்ளதாகவும் பர்மிய மந்திரியான தாகின் சான்மியர் என்பார் கூறியுள்ளார்.

1953—54-ம் ஆண்டு மட்டும் 6,74,560 ஏகர் நிலம் தேசியமயமாக்கப்பட்டது என்றும் இதற்கு ரூ. 155 இலட்சம் நஷ்டஈடு தரப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இதுவரையில் 6,497 பேர் நஷ்டஈடு கோரியுள்ளதாகவும், இவர்களுக்கு ரூ.82இலட்சம்வரை சர்க்கார் நஷ்ட ஈடாகத் தரவிருக்கிறது என்றும், இதில் செட்டியார்களுக்கு ரூ. 42 இலட்சம் கிடைக்கும் என்றும் அந்த மந்திரி கூறியிருக்கிறார்.

எதிர்பார்த்தது நடக்கிறது! பரம்பரை குணம் வெளியாகிறது!

உடன்படிக்கைக்கு எதிராக பி. எஸ். பி. அபேட்சகரை தோற்கடித்த விந்தை!

தனித் தொகுதியில் காங்கிரசை வெற்றிபெறச் செய்த பொதுவுடைமையர் அரசியல் விசித்திரம்!

கோவைத் தொகுதியில் கூடிக் குடிகெடுத்த கம்யூனிஸ்டு சதி அம்பலம்

'சமுதாயம்' சஞ்சலப்படுகிறது—சாந்திக்கு முயலுகிறது!

"தேர்தல் முடிவுகள் சில சமயங்களில் ஆச்சரியப் படத்தக்கதாகவும் புரிந்து கொள்ள முடியாததாகவும், இன்னும் சில சமயங்களில் அதிர்ச்சி அளிப்பதாகவும் இருப்பது உண்டு. ஆனால் கோவை ரூரல் இரட்டை மெம்பர் தொகுதி முடிவு மிகுந்த வேதனை அளிப்பதாகவும் பெரும் நாசகரமான விளைவுகளுக்கு வழிகோலுவதாகவும் உள்ளது.

சுதந்திரம் பெற்ற இந்த 10 ஆண்டுகளில் நாடு இருந்த இருப்பை, குறிப்பாக உழைக்கும் மக்களின் பரிதாபகரமான-அனுதாரவான நிலையையும் முதலாளித்துவம் ஆக்கம் பெற்று வருவதையும் கண்ட நாம், உழைக்கும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் இருசக்திகள்—கம்யூனிஸ்டு-சோஷலிஸ்டு பிரிவுகள் ஒன்றுபடுவது அவசியம் என உணர்ந்தோம்.

எந்த நிலையிலே?

அடிப்படைக் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் இந்த இரு பிரிவுகளுக்கு இடையே முக்கிய மாறுபாடுகள் இருந்தபோது இதை நாம் விரும்பி வற்புறுத்தினோம்.

இவைகளிடையே இருந்து வந்த நீடித்த வேறுபாடுகளால்ஆழமாகப்பதிந்திருந்த பகைமையும், பூசலும் இருந்த காலத்திலே நாம் ஒற்றுமைக்காக வாதாடினோம்.

நமது வாதம் வெற்றியும் பெற்றது.

கோவை வட்டாரத்தில் கடந்த 20 வருடகாலமாக இருந்து வந்த பகைமை நீங்கி தொழிற்சங்க துறையிலே நேச உறவும், ஒத்துழைப்பும் ஏற்பட்டது.

அரசியல் துறையிலும் சோஷலிஸ்டு—கம்யூனிஸ்டு தலைமை விவேகமாக ஒத்துசெயல்பட்டன. தமிழகத்தில் தேர்தல் ஏற்பாடு ஏற்பட்டது.

இதனை, தமிழகத்தின் உழைக்கும் மக்கள், அரசியல் பக்குவம் படைத்த மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்று ஆதரித்தார்கள்; உற்சாகமாக அதனை வெளிப்படுத்தினார்கள்.

இந்த நேச உறவு தொழிலாளி வர்க்கத்திற்குப் பல அருமையான வெற்றிகளைக் கொண்டு வந்தது; விரும்பத்தகாத சகோதரச் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

எல்லோரும் விரும்பிய இந்த நேச நிலைக்கு உலைவைப்பதாக வந்துள்ளது கோவை ரூரல் தொகுதி முடிவு.

வேண்டுமென்றே சில விஷமிகள் திட்டமிட்டு, சோஷலிஸ்டு அபேட்சகரை தோல்வியடையச் செய்யவேண்டுமெனக் கருதி அதில் வெற்றியும் பெற்றுள்ளனர் என்ற கருத்து, தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ளது.

இரட்டை மெம்பர் ரூரல் தொகுதிக்குப் பொது ஸ்தானத்திற்கு சோஷலிஸ்டு அபேட்சகரும், ரிசர்வ் ஸ்தானத்திற்கு கம்யூனிஸ்டு அபேட்சகரும் தேர்தல் ஏற்பாட்டின்மீது நிறுத்திவைக்கப்பட்டனர். இரு பிரிவுகளும் சேர்ந்து தேர்தல் இயக்கத்தை நடத்தினர்; தேர்தல் வேலைகளைச் செய்தனர்.

கம்யூனிஸ்டு அபேட்சகரைக் காட்டிலும் சோஷலிஸ்டு அபேட்சகருக்கு 5,741 ஓட்டுகள் குறைவாகக் கிடைத்துள்ளது. இதனால், இரண்டு ஸ்தானங்களும் ரிசர்வ் ஸ்தான அபேட்சகர்களுக்கே சென்றுவிட்டது.

இது தற்செயலாகவோ, ஓட்டர்கள் தன்னிச்சையாகத் தெரிந்தோ தெரியாமலோ ஓட்டளித்ததாலோ ஏற்பட்டதல்ல; வேண்டுமென்றே சிலர் இதனைத் திட்டமிட்டுசெய்துள்ளனர். இதற்குக் காரணங்களும் ஆதாரங்களும் இருக்கின்றன எனத் தொழிலாளர்கள் கருதுகின்றனர்.

இந்த விபரீதத்தால், அரும் பாடுபட்டு அடைந்த ஒற்றுமை நொடியில் தகர்க்கப்பட்டுவிட்டதைக் காண்கிறோம்.

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் தலைவன் வஞ்சகமாகத் தோற்கடிக்கப்பட்டதைக் கண்டு ஆற்ற முடியாத ஆத்திரத்தில்—வெஞ்சினத்தில் துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

விபரீதம் நடந்துவிட்டது; அதன் விளைவுகளைத் தடுத்து நிறுத்த இரு பிரிவு தலைவர்களும் இப்போது முன்வருவது அவசரமானது என வற்புறுத்த விரும்புகிறோம். வேறு எதுவும் நிலைமையை சமாளிக்காது: மீண்டும் ஒன்றுசேர முடியாத பிளவைத் தவிர்க்க முடியாது என அஞ்சுகிறோம்.

கம்யூனிஸ்டு அபேட்சகரை ராஜினமா செய்யச் செய்வது, ஒரு சரியான விசாரணை நடத்தி குற்றவாளிகளை கட்சியைவிட்டு வெளியேற்றுவது ஆகிய இரண்டும்தான் நிலைமையைச் சீர்படுத்தும்; நீடித்த தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கு உறுதி செய்யும்.

கம்யூனிஸ்டு தலைமை இதன் அவசரத்தை உணர்ந்து நேர்மையுடன் நடந்துகொள்ள முன்வரவேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

கழகத் தோழர்களின் வெற்றி தரும் மகிழ்ச்சிப் பெருக்கு

நாடெங்கிலும் கொண்டாட்டம்

ஜனநாயகக் கடமையாற்றத் தேர்தலில் களம் புகுந்த கழக வீரர்களின் வெற்றி கேட்டு, பல இடங்களில் மகிழ்ச்சிப் பெருக்கின் காரணமாகப் பாராட்டு ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன; அவற்றின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:

சென்னை பெண்கள் படிப்பகம்

தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் பெரம்பூர் தனித் தொகுதியில் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியைக் கேட்டும், மற்ற இயக்க முன்னணி வீரர்கள் வெற்றி பெற்றதையும் கண்டு. அனைவரையும், 'தாயகத்தின் துயரைத் துடைக்க நற்பணியாற்ற வாரீர்' என்று வாழ்த்தி வரவேற்கிறது.

சென்னை-குருபுரம்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அடைந்துள்ள போற்றத்தக்க வெற்றியை அறிந்ததும், தோழர்களும் ஆதரவாளர்களும் தோழர் ஏ. வி. தேவன் தலைமையில் 200-க்கு மேற்பட்ட பள்ளிச் சிறுவர்களுக்கு 17—3—57 அன்று இனிப்புகள் வழங்கினர்.

அம்பில்

தோழர் மு. கருணாநிதி அவர்கள் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றி செய்தியைகேட்டு இரா. கோபால கிருட்டிணன் தலைமையில் இனிப்புப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இந்த மகிழ்ச்சி விழாவில் ஊர்ப்பெரியவர்கள், தாய்மார்கள், இளஞ் சிறுர்கள் கலந்து கொண்டனர்.

அரியலூர்

அண்ணா அவர்கள் காஞ்சித் தொகுதியில் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியை அரியலூர் மக்கள் மிக்கமகிழ்ச்சியுடன்வரவேற்றனர்.

தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி, தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதை ஊரெங்கும் அறிவித்தனர்.

மதுரை

தோழர்கள் ஈ. வெ. கி சம்பத், சத்தியவாணி-முத்து, எம். பி. சாரதி ஆகியோர் வெற்றிபெற்றதை அறிந்த கழகத் தோழர்கள் ஊர்மக்களுக்கு மிக்க மகிழ்ச்சியுடன் அறிவித்தனர். வெடிகள் முழக்கியும், இனிப்பும் பண்டங்கள், பானங்கள் தந்தும் ஊர்வலமாகச் சென்றனர்.

சென்னை கே. வி. கே. சாமி நினைவு மன்றம்

அண்ணா, தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் வெற்றியை முன்னிட்டு மன்றத்தின் சார்பில் 500 பிள்ளைகளுக்குக் காப்பி வழங்கப்பட்டுள்ளது.

விளாப்பாக்கம்

வ. ஆ. மாவட்டம் விளாப்பாக்கம் தி. மு. கழகச் சார்பில் காஞ்சித் தொகுதியில் வெற்றி பெற்ற அண்ணா அவர்களைப் பாராட்டி ஒரு மாபெரும் இரத ஊர்வலம் 7—3—57ல், தோழர் குப்புசாமி அவர்கள் தலைமையில் புறப்பட்டது. ஊர்வலத்தில் பல கட்சித் தோழர்களும் கலந்துகொண்டனர். இறுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

அம்மையநாயக்கனூர்

தோழர் மு. கருணாநிதி குளித்தலையில் சென்னை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கேட்டு பகுத்தறிவு படிப்பகத்தினர் ஊர்வலமாகச் சென்று பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

'வாய்ச் சவடால்' வாழ்வு தருமா?

கைத்தறியாளருக்கு டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் செய்த நன்மைகள்தான் என்ன?

நெசவாளர்கள் வாழ்வு சிறக்க செய்ய வேண்டியவைகள் யாவை?

"இந்திய மத்திய அரசாங்க நிதி மந்திரி அண்மையில் தாம் ஆற்றியதொரு சொற்பொழிவில் வியாபார-தொழில் இலாகா, கைத்தறி நெசவுத் தொழில் நிலையானதாக இருக்கும்படி செய்வதில் நல்லதொரு பணிபுரிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆனால் உண்மையில் மத்திய அரசாங்கம், குதிரைக்கு முன்னால் வண்டியைக் கட்டும் செயலைவிட மோசமானதொரு செயலைச் செய்துள்ளது. அது, குதிரையையே வண்டிக்குள் வைத்திருக்கிறது. கைத்தறி நெசவுத் தொழிலின் முன்புள்ள பிரச்சினையாகிய கைத்தறி நெசவுத் துணிகளை விற்பதில் ஏற்படும் சங்கடம், கைத்தறித்துணிகளுக்கும் ஆலைத் துணிகளுக்கும் உள்ள விலையில் பெரும் அளவுக்கு ஏற்றத் தாழ்வு இருப்பதாலும், ஒரு நிரந்தரமான நிலை இல்லாததாலும் ஏற்படுகின்றது. இவ்விரண்டு பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டனவா?

"ஆலைத் துணிகளுக்கு அதிக வரி விதித்தும், கைத்தறித் துணிகளுக்கு என ஒரு சந்தை அமைத்தும், ஆலைகள் உற்பத்தி செய்யும் துணிகளைக் கட்டுப்படுத்தியும், சில குறிப்பிட்ட வகையான துணிகளை உற்பத்தி செய்வதற்குத் தடை விதித்தும் பணத்தைப் பெருக்குவது எப்படி நல்லதொரு செயலாகும்?

"இந்த நடவடிக்கைகளினால் கைத்தறி நெசவுத் தொழில் ஒரு நிரந்தரமான நிலையை அடைய முடியுமா?

"ஆலைகள், 'வாயில்' துணிகளில் அச்சடித்த சேலைகளை ஏராளமாக உற்பத்தி செய்து ஏழை மக்கள் அவற்றை அதிகமாக விரும்பும்படி செய்துவிடவில்லையா?

"மற்ற மாகாணங்களிலிருந்து ஆலைத் துணிகள் சென்னை மாநிலத்திற்கு இறக்குமதி செய்வது தொடர்ந்து நடைபெறவில்லையா?

"கூட்டுறவுச் சங்கங்களில் வேலை பார்த்துவரும் நெசவாளர்களுக்கு முழுநேர வேலையும், வாழ்க்கைக்குத் தேவையான கூலியும் கிடைக்கிறதா?

கைத்தறி, ஆலைத் துணிகளுக்கான விலைகளில் ஏற்படும் ஏற்றத் தாழ்வு, கைத்தறித் துணிகள் மெதுவாகவும், உயர்ந்த விலையிலும் தயாரிக்கப் படுவதால் அல்ல. எனெனில், ஒரே அளவுள்ள முதலீடு கைத்தறித்துணி உற்பத்திக்கும் விசைத்தறித் துணி உற்பத்திக்கும் போடப்படுமானால், அதிகமான கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன; அதற்காகும் செலவும் குறைவாகவுள்ளது. ஆனால் குறைந்த விலையிலுள்ள கைத்தறித் துணி, கடைகளில் கிடைப்பது அரிதாக உள்ளது; அதே சமயத்தில் விலையுயர்ந்த ஆலைத் துணி குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

"இந்நிலைமை ஏற்படக் காரணம் என்னவென்றால், நூலும் துணியும் உற்பத்தி செய்யும் ஆலைகள், தமது விசைத்தறிகளுக்குத் தேவையான பக்குவம் செய்யப்பட்ட பொருள்களை விநியோகம் செய்கின்றன. அதனால் அவ்விசைத்தறிகள் தொடர்ந்து பல நாள் வேலை செய்வதற்கு ஏதுவாயுள்ளது.

"ஆனால் மத்திய அரசாங்கம், கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பொருள்களை நிரந்தரமாக விநியோகம் செய்யவோ, விலைகளின் ஏற்றத் தாழ்வுகளைக் கட்டுப்படுத்தவோ எவ்வித கடும் நடவடிக்கையும் எடுக்கவில்லை.

"அதாவது, நூல் உற்பத்தி செய்யும் ஆலைகளின் உற்பத்தியைத் தங்கள் அதிகாரத்திற்குட்பட்டதாக்கி, கைத்தறித் தொழிற்சாலைகளைச் சொந்தமாகத் தொடங்கும்படியும் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், தறி நெசவுக்கான பொருள்களை விநியோகம் செய்வதில் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டு இயங்குமாறும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவி செய்யக் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. அல்லது கைத்தறித் துணி விற்பனைக்கென ஒரு மொத்த விலைச் சந்தையும் அமைக்கவில்லை.

"கைத்தறி நெசவுக்குக் கொடுக்கப்படும் 'பாவு நூல்' குறைந்த நீளமுள்ளதால் கைத்தறிகள் வேலையின்றி இருக்க வேண்டியதாகவும் உள்ளது. பாவு நூலைக் குறைந்த நீளமுள்ளதாக வெட்டுவதால் நாட்டிற்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகின்றது.

"எனவே, 'செஸ்' நிதியிலிருந்து ஏராளமான பணம் செலவு செய்யப்படுவதினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்ந்து பார்த்து, கைத்தறி நெசவுத் தொழிலை நிலையானதொன்றாக ஆக்குவதற்கென ஒரு குழு அமைக்கப்படவேண்டுவது இன்றியமையாததாகும் என்று தோன்றுகிறது."

மேற்கூறியவாறு கைத்தறி நெசவுத்தொழில் வளர்ச்சியில் அக்கரையுள்ள ஒருவர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் தீட்டியுள்ளார்.

பொதுச்செயலாளர் விளக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செலவழிக்கக்கூடிய பெரும் பணக்காரர்களையும், மிட்டா மிராசுகளையும், ஆலை அதிபர்களையுமாகப் பார்த்து தேர்ந்தெடுத்திருக்கிறது.

வாக்குகளைப் பணம் கொடுத்து வாங்கவும், வேறு பல இழி முறைகளைக் கையாளவும் காங்கிரஸ் கொஞ்சமும் தயங்கவில்லை என்பதை பொதுமக்கள் அனைவரும் நன்கறிவர். மேலும், கொள்கை கோட்பாடுகளைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாமல், தேர்தலில் வெற்றி பெறுவதையே குறிக்கோளாகக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கிற காங்கிரசுக்கும், 'தோற்றாலும் பரவாயில்லை; இலட்சியத்தினின்று வழுவிவிடவும், கொள்கையினை விட்டுக்கொடுத்திடவும் கூடாது,' என்று கொள்கை அடிப்படையிலே நின்று போட்டியிடுகிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஏற்படுகிற வெற்றி தோல்விகள் ஒருமித்தவையாக நிச்சயம் இராது என்பதையும் நாம் உணரவேண்டும்.

கொள்கை அடிப்படையில் நின்று போராடுகிற நமக்கு தேவைகள் ஏராளமாகவும், எதிர்ப்புகள் அதைவிட அதிகமாகவும் இருக்கிற காரணத்தால், எதிர்ப்புச் சக்திகள் பிற்போக்குத்தன்மை வாய்ந்தனவாக இருந்தாலும், வேறு பல வசதிகளைக்கொண்டு எப்படியோ வெற்றிபெற முடிகிறது.

இவ்வுண்மையை உணருகிறவர்கள் யாரும், கொள்கைகள் தோற்றுவிட்டதாகவோ உண்மைகள் அழிந்துவிட்டதாகவோ கருதமாட்டார்கள். காஞ்சிபுரத்தில் இருந்த எதிர்ப்புக்கும், சதி திட்டங்களுக்கும், சூழ்ச்சிகளுக்கும் இடையே அண்ணா அவர்கள் பெற்றிருக்கிற வெற்றி, மாற்றாரும் கண்டு பாடம் பெறவேண்டிய ஒரு மகத்தான நிகழ்ச்சியாகும்.

அண்ணா அவர்களின் வெற்றி பெருமைப்படத்தக்கதுதான். பெருமிதமான வெற்றி என்பது மட்டுமல்லாமல், நாட்டு மக்களிடத்தில் நயவஞ்சகமாகப் பேசி எதையும் சாதித்துவிட முடியும் என்று நினைப்போருக்கு நல்ல அடியாகவும் அது அமைந்திருக்கிறது.

'இங்கே விழுகிற அடி, இவர்களுடைய கொள்கைகளுக்கே சமாதி கட்டும்' என்று காமராசர், காஞ்சிபுரத்திலே பேசினார்; அந்தப் பேச்சுக்குப் பிறகுதான் அண்ணா அவர்கள், பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை - கோட்பாடுகளை மக்கள் பெருவாரியாக ஏற்றுக்கொண்டார்கள் என்பதைத்தானே இது காட்டுகிறது என்று நாம் கேட்க விரும்புகிறோம்.

தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்கடித்துவிட வேண்டுமெனத் திட்டமிட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள், நிச்சயம் தோற்றுப் போயிருக்கிறார்கள் என்று நாம் கூறமுடியும்.

தேர்தலில் தி. மு. க. அபேட்சகர் வெற்றி பெறமற்போன பகுதிகளிலும், கழகம் தனது செல்வாக்கைத் தேர்தலின் காரணமாக இழந்துவிடவில்லை யென்பதை அந்தந்தப் பகுதி மக்கள் நன்கறிவார்கள்.

நாட்டில் இதுவரை சொல்லி வந்த கொள்கைகள் மேலும் வலிவுபடவும், விரிவடையவும் சட்டசபையும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாம் தேர்தலில் ஈடுபட்டோம்: தேர்தல் நேரத்தில் வேகமாகவும், விரிவான அளவிலும் நமது கொள்கைகளை நாம் பிரச்சாரம் செய்திருக்கிறோம்.

தேர்தல் நேரத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பல நூறு புதிய கிளைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன என்பது கழகத்தின் வளர்ச்சிக்கு மேலும் வேரூன்றுவதாகும். அதிகமான மக்கள் நம்முடைய கொள்கைகளைப் புரிந்து கொள்ளவும், நமக்கு ஆதரவு தரவுமான நிலைமைகள், இந்தத் தேர்தல் காரணமாக நமக்குக் கிடைத்திருக்கிறது என்பது, நமது வரவு வகையில் வைக்கத்தக்கதாகும்.

காங்கிரஸ் இந்தத் தேர்தலில் எதிர்ப்பேயின்றி மிகச் சுலபமாக வெற்றி பெற்றுவிட முடியும் என்றிருந்த எதேச்சாதிகார எண்ணத்தில் மண்விழச் செய்திருக்கிறது, நம்முடைய தேர்தல் பிரச்சாரம்! காங்கிரசுக்காரர்களும், போகிற இடமெல்லாம் நம்மைத்தான் தாக்கி, நாம் ஒருவர்தான் அவர்களுக்கு எதிர்ப்பாக இருப்பது என்கிற உண்மையை அவர்களே விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள்.

அசையாத திருமேனிகள் எல்லாம் ஆயிரம் வாயிற்படிகளை ஏறி இறங்கவும், பேசாமடந்தைகள் எல்லாம் வாய்த் திறந்து பேசவுமான அதிசய நிகழ்ச்சிகளை யெல்லாம் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் உண்டாக்கியிருக்கிறது. நமது எதிர்ப்பு என்ற ஒன்று இந்தத் தேர்தலில் இல்லாதிருக்குமானால், வீட்டிலிருந்தபடியே பணத்தைக் கொட்டி ஓட்டு வேட்டையாடி விட்டிருப்பார்கள், காங்கிரஸ் அபேட்சகர்கள் பலர்! இந்த நிலைமைகளுக்கான வசதிகளும் சூழ்நிலைகளும் நிச்சயம் இருக்கத்தான் செய்தன; ஆனால் அவை அத்தனையையும் தூளாக்கிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தையே சாரும்.

வளர இருந்த எதேச்சாதிகாரத்தைத் தடுத்து நிறுத்தவும் 'வடநாடு தென்னாட்டை அழித்து வருகிறது,' என்ற உண்மையை, மறைக்கவோ மழுப்பவோ முடியாமல் காங்கிரஸ்காரர்களைத் திண்டாட வைக்கவும் நம்மாலே முடிந்தது நமக்கு மிகப் பெரிய வெற்றியாகும்.

'தேர்தல் என்பது நமது ஜீவமரணப் போராட்டமல்ல' என்பதை நாம் தேர்தலுக்கு முன்பிருந்தே சொல்லி வந்திருக்கிறோம். 'தேர்தலிலே பெறுகிற வெற்றியோ தோல்வியோ நம்முடைய எதிர்காலத்தை அடியோடு மாற்றிவிடும்' என்று, என்றுமே நாம் நம்பியதில்லை. பல்வேறு முனையில் நாம், நமது கொள்கைகளை வலுவுபடுத்த வேண்டுமென்ற நினைத்ததின் ஒரு அங்கமாகவே சட்டசபைத் தேர்தலும் இருக்கிற காரணத்தால், அதில் பெறுகிற தோல்வியினாலே நாம துவண்டுவிடப்போவதில்லை.

இன்றையத் தேர்தலில் இலாப நஷ்டக் கணக்குப் போட்டுக்கொண்டு இறங்கியவர்களுக்கும், அரசியல் சதுரங்கமாடுகின்றவர்களுக்கும் வேண்டுமானால் இந்தத் தேர்தலில் அதிர்ச்சியோ ஆனந்தமோ இருக்கக்கூடும். அத்தகையோர் நமது அனுதாபத்திற்கு உரியவர்கள். அவர்களுக்குக் கொள்கை என்பது எதுவுமில்லை; எனவே, அவர்களைப் பற்றிக் கவலை கொள்ளவும் தேவையில்லை.

கொள்கையைக் குழப்பிக் கொண்டவர்களுக்கும், கூலிக்கு மாரடிப்போருக்கும் இன்றையத் தேர்தல் வெற்றிகள் மகிழ்வளிப்பனவாக இருந்தால், அதனால் நமக்கு ஒன்றும் நஷ்டமில்லை. அவர்களுக்கு கிடைத்திருக்கிறதாக நம்பப்படுகிற வெற்றிகள் முற்றுப்புள்ளிகள் இட்டு நிறுத்தப்பட வேண்டிய கடைசிக் கட்டங்களைச் சார்ந்தவை.

வெற்றியானாலும் தோல்வியானாலும் அவைகள் நம்முடைய கொள்கைகளுக்கு மேலும் பலமூட்டுவனவாகவே அமைகின்ற காரணத்தால், நாம் வெற்றி—தோல்வி இரண்டையுமே சமமாக நினைக்கிறோம்.

வெற்றி கண்டதினாலே வெறிப்போக்கோ தோல்வி கண்டதினாலே, விரக்தி மனப்பான்மையோ கொள்ளாமல் நாம் நமது பாதையில் மேலும் முன்னேறிச் செல்லப் போவது உறுதி.

நாம் நடந்தாக வேண்டிய பாதை வெகு தொலைவானது; கடந்தாக வேண்டிய கட்டங்கள் தொல்லையும் துயரும் நிறைந்தவை; ஆனாலும் நாம், 'அடைந்தாகவேண்டும்' என்கின்ற இலட்சியங்கள், உயிரினும் மேலானவை என்ற நினைவு நமக்கு என்றும் மாறாமல் மறையாமல் இருப்பதால், மனந் தளராமலும் புதுத் தெம்போடும் நமது பாதையில் வேகமாக முன்னேறிச் செல்வோம்.

எதுவரினும் அஞ்சோம், நில்லோம் இன்பத் திராவிடம் அடைந்தே தீருவோம்! இது உறுதி!

'உடுப்பி' ஓட்டல் முதலாளியின் திடீர்த் தாக்குதல்

130 தொழிலாளர்களை பட்டினிப்போட சதியா?

சென்னை, மார்ச் 19—

சென்னை மவுண்ட்ரோடில் உள்ள மிகப்பெரிய சிற்றுண்டிச் சாலையான உடுப்பி கிருஷ்ணா விலாஸ் முதலாளி திடீரென்று தனது இரு ஓட்டல்களையும் மூடியுள்ளார்.

அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு 24 மணி நேர நோட்டீஸ் கொடுத்து வெளியேறும்படிக் கோரியுள்ளார்.

இதனால் 130 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தொழிலாளர் அனைவரும் ஓட்டலிலேயே இருந்துவருகின்றனர்; வெளியில் போலீஸ் பாதுகாப்பு இருந்துவருகிறது.

பல தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, குறைந்த தொழிலாளர்களை வைத்துக் கொண்டு அவர்களை அதிக நேரம் வேலை செய்யச் செய்து கொள்ளை இலாபம் சம்பாதிப்பதற்காகவே முதலாளி செய்யும் சூழ்ச்சி இது என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

இந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்த்துத் தொழிலாளர்கள் போராட உறுதிகொண்டுள்ளனர்.

ஓட்டல் தொழிலாளர் சங்கச் செயலாளர் லேபர் கமிஷனரிடம் முறையிடச் சென்றுள்ளார்.

அண்ணா

மற்றும்

வெற்றி பெற்றோருக்குப் பாராட்டு

22-3-57 மாலை 5-மணிக்கு, காஞ்சீபுரத்தையடுத்த பரந்தூர் கிராமத்தில், அரங்கசாமி நினைவு மன்றச் சார்பில், தோழர் கோ. காளியப்பன் அவர்கள் தலைமையில், அண்ணா, மற்றும் வெற்றி பெற்ற தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியவர்களைப் பாராட்டு முகத்தான் கூட்டமொன்று நடைபெறும்.

தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ். மணி, டி. சீனுவாசன், பி. ஜி. அண்ணாமலை ஆகியோர் பேசுவர்.

★★★★★★★★★★★★★★★★★

இந்த வாரம்!

திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

★

★ தேர்தல் முடிவும்—தி. மு. கழகமும்

★ ஆளும்வர்க்கத்தின் அநீதி!

★ பெரியார் பேசுகிறார்!

ஆகிய கட்டுரைகளையும், முக்கிய குறிப்புகளையும் தாங்கி, சென்னை நகரில் 21—3—57 அன்றும், வெளியூர்களில் 22—3—57-லும் வெளிவரும்.

விலை 2 அணா

★

நிர்வாகி: 'திராவிடன்'

16/99, அம்மன்கோயில் தெரு

சென்னை-1.

★★★★★★★★★★★★★★★★★

தமிழகத்தின் தேர்தல் முடிவுகள்

ஜனநாயகப் பாதுகாப்பில் நமது பணி

சென்னை, மார்ச் 19—

தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் குறித்து மேலும் தகவல்கள் இங்கு தரப்படுகிறது:—

விருத்தாசலம் பகுதியில் சென்னை சட்ட சபைக்குப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் தோல்வியடைந்துள்ளார். கம்யூனிஸ்டுக் கட்சி அபேட்சகர் இந்தத் தொகுதியில் தி. மு. கழக அபேட்சகரை எதிர்த்துப் படு தோல்வியடைந்துள்ளார்; அவருக்கு டிபாசிட்டே பறிபோயிற்று. மற்றும் சுயேச்சைகளாகப் போட்டியிட்ட நால்வரும் டிபாசிட் இழந்தனர்.

சீர்காழி சட்ட சபைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்ட தி. மு. கழக அபேட்சகர்களை, கம்யூனிஸ்டுக் கட்சி அபேட்சகர்களும் எதிர்த்துப் போட்டியிட்டதால் பொது, தனி இரண்டு இடங்களையும் காங்கிரஸ் கைப்பற்றி விட்டது.

நெல்லிக்குப்பம் சட்டசபைத் தொகுதியில் மந்திரி எஸ். எஸ். இராமசாமி படையாச்சியை எதிர்த்துப் போட்டியிட்ட கழக அபேட்சகரான சாதாரண கல்லூரி மாணவர் தோழர் கிருஷ்ணமூர்த்தியைவிட அமைச்சர், ஒரு சில வாக்குகளே அதிகம் பெற்று மயிரிழையில் தப்பினார். தனித் தொகுதியில் போட்டியிட்ட தி. மு. கழக அபேட்சகருடன் மற்றொரு சுயேச்சையும் போட்டியிட்டதால் அங்கும் காங்கிரஸ் வெற்றிபெற்றிருக்கிறது.

பஞ்சப்பட்டியில் காங்கிரசை எதிர்த்த சா. சி. ச. அபேட்சகர் தோல்வியுற்றார்; சுயேச்சையாகப் போட்டியிட்டவர் ஜாமீன் இழந்தார்.

கள்ளக்குறிச்சியில் பொது, தனி ஆகிய இரண்டு இடங்களிலும் தி. மு. கழகம் போற்றத்தக்க முறையில் வெற்றிபெற்றுள்ளது. சுயேச்சையாகப் போட்டியிட்ட அனைவரும் ஜாமீன் தொகையைப் பறிகொடுத்தனர்.

திருப்பரங்குன்றத்தில் காங்கிரஸ் அபேட்சகரை கம்யூனிஸ்டு, சா. சி. ச. இரண்டும் எதிர்த்துப் போட்டியிட்டும் காங்கிரஸ் அபேட்சகர் சுமார் 3,000 வாக்குகளே அதிகம் பெற்றுள்ளார்.

கழகம் போட்டியிடாத நன்னிலம் தொகுதியில் பொது, தனி ஆகிய இரண்டு இடங்களிலும் கம்யூனிஸ்டுக் கட்சி அபேட்சகர்கள் வெற்றிபெறவில்லை; காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றி பெற்றுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★

வெற்றி பெற்ற கழக வீரர்கள்

சட்டசபையில்......

1. அண்ணா
2. அண்ணாமலை (களம்பூர்)
3. அன்பழகன் க.
4. ஆசைத்தம்பி ஏ. வி. பி.
5. ஆனந்தன்
6. இருசப்பன்
7. கருணாநிதி மு.
8. கோவிந்தசாமி ஏ.
9. சண்முகம் ப. உ.
10. சத்தியவாணிமுத்து
11. சந்தானம் எஸ்.
12. சாரதி எம். பி.
13. சுப்பிரமணியம் எம். பி.
14. செல்வராஜ் எம்.
15. நடராசன்

* * *

மக்கள் சபையில்......

1. ஈ. வெ. கி. சம்பத்
2. தர்மலிங்கம்

(ஆதரவாளர்கள்)

3. டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
4. என். சிவராஜ்

★★★★★★★★★★★★★★★★★

கார் விபத்தில் நடிப்பிசைப் புலவர்

ஓங்கோல், மார்ச் 20—

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, டைரக்டர் காசிலிங்கம், மற்றொரு திரைப்படத் துறை தாரகர் ஆகியோர் சென்னையிலிருந்து ஐதராபாத்திற்கு, திரைப்படமொன்று சம்பந்தமாகக் கலந்து பேசுவதற்குக் கார் மூலம் சென்று கொண்டிருக்கையில் ஓங்கோல் அருகில் அவர்கள் சென்ற கார் விபத்துக்குள்ளாகியது.

அவ்விபத்தில், வில்லிவாக்கத்தைச் சேர்ந்த தோழர் சீனிவாசன் என்பவர் மரணமடைந்துள்ளார். மற்றவர்கள் எல்லோருக்கும் காயமேற்பட்டதால் ஓங்கோல் மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நடிப்பிசைப் புலவரும் மற்றவர்களும் குணமடைந்து வருவதாகவும், அநேகமாக இன்று சென்னைக்கு திரும்பிவிடுவார்கள் என்றும் தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.